# நன்றியுள்ள கீரிப்பிள்ளை



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# நன்றியுள்ள கீரிப்பிள்ளை

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# நன்றியுள்ள கீரிப்பிள்ளை





ஓர் ஊரில் கணவனும் மனைவியும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. ஒரு நாள் கணவர் வேலைக்குச் செல்லும் வழியில் ஒரு சின்னக் கீரிப்பிள்ளையைப் பார்த்து தன் வீட்டிற்கு எடுத்து வந்தார். அவரது மனைவி அதனைத் தன் பிள்ளைகளோடு சேர்த்து உணவு ஊட்டி வளர்த்தாள்.



சில நாட்கள் சென்றன. ஒருநாள் கீரிப்பிள்ளையின் பாதுகாப்பில் தன் குழந்தையை விட்டுவிட்டு மனைவி தண்ணீர் எடுப்பதற்கு ஆற்றங்கரைக்குச் சென்றிருந்த பொழுது வீட்டிற்குள் பாம்பு ஒன்று நுழைந்தது. குழந்தை தொட்டிலில் தனியாக தூங்கிக் கொண்டிருந்தது. கீரிப்பிள்ளை குழந்தையைக் காப்பாற்ற பாம்பிடம் சண்டையிட்டு பாம்பைக் கொன்றது.



நாம் குழந்தையைக் காப்பாற்றி விட்டோம் என்று பெருமையாக எண்ணியக் கீரிப்பிள்ளை தன்னை வளர்த்தவர்களை எதிர்பார்த்து வீட்டிற்கு வெளியே காத்துக் கிடந்தது. ஆற்றங்கரைக்குச் சென்று வந்த மனைவி கீரிப்பிள்ளையின் வாயில் இருந்த இரத்தத்தைப் பார்த்து தன் மகனைக் கீரிப்பிள்ளை கொன்றுவிட்டது என நினைத்து கீழே கிடந்த கட்டையை எடுத்து கீரிப்பிள்ளையை அடித்தாள்.



கீரிப்பிள்ளை இறந்தே விட்டது. வீட்டிற்குள் வேகமாகச் சென்று பார்த்ததில் அதிர்ச்சியானாள். குழந்தை தொட்டிலில் அமைதியாகத் தூங்கிக் கொண்டிருந்ததைக் கண்டு குழந்தையைச் சுற்றி சுற்றிப் பார்த்தாள். குழந்தைக்கு அருகில் பாம்பு ஒன்று இறந்து கிடந்தது.



“கீரிப்பிள்ளை தன் குழந்தையைக் காப்பாற்றவே பாம்பைக் கொன்றுள்ளது அதன் வாயிலிருந்த இரத்தம் குழந்தையின் இரத்தம்” என்று, நாம் அவசரப்பட்டு கீரிப்பிள்ளையைக் கொன்று விட்டோமே! என்று மிகவும் வருந்தினாள்.



# கதையின் நீதி

நாம் எப்பொழுதும் அவசரத்தில் முடிவுகளை எடுக்கக் கூடாது.

# நாம் எப்பொழுதும் அவசரத்தில் முடிவுகளை எடுக்கக் கூடாது



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com